மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை

முன்னிலை :- திரு.M. ரவிச்சந்திரன், பிஏ.,பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, பட்டுக்கோட்டை

2022 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு2053-ஸ்ரீசுபகிருது வருடம் வைகாசித் திங்கள் 20 ஆம்நாள்

**இடைநிலை மனு எண் 1/ 2022**

**இன்**

**அசல் வழக்கு எண் 103/2021**

பாரதிராஜா ... மனுதாரர்

(வாதியின் அதிகாரம் பெற்ற முகவர்)

செல்லம்மாள் ... வாதி

/ எதிர்/

1. முத்துவேல்

2. அண்ணாமலை ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு 02.06.2022ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்/வாதியின் பவர் ஏஜெண்ட் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஜி. ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. என். பாலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இருநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 3 விதி 1 மற்றும் 2 ன்கீழ் வாதியின் சார்பாக மனுதாரர் அதிகார முகவர் அசல் வழக்கை நடத்த அனுமதி வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர் /வாதியின் பவர் ஏஜெண்ட் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்</u>** :-

மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம், விளம்புகை பரிகாரம் அதனை அனுசரித்து தாவா சொத்தின் சுவாதீனப்பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல்

செய்து, அதை எதிர்த்து பிரதிவாதிகள் கட்சியாடி வந்துள்ள நிலையில், மேற்படி அசல் வழக்கானது சாட்சிகள் விசாரணைக்காக பட்டியலில் இடப்பட்ட நிலையில், மனுதாரர்/வாதியின் அதிகார முகவர் அசல் வழக்கில் வாதிக்கு உடல்நிலை சரியில்லாமல் சென்னையில் சிகிச்சை பெற்று வருவதால் மனுதாரருக்கு கடந்த 12.01.2022 ல் ஒரு சிறப்பு அதிகார பத்திரம் மூலமாக வாதியின் முகவருக்கு அசல் வழக்கில் வாதிக்கு சார்பாக வழக்கு விசாரணை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படியார் சார்பாக வழக்கை நடத்த வேண்டியிருப்பதால், வாதியின் சார்பாக வழக்கை நடத்த அனுமதி வழங்க உத்தரவிட வேண்டியது மெத்த அவசியமும், நியாயமும் ஆகிறது என்றும், இல்லையேல் வாதிக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே வாதியின் சார்பாக வழக்கை நடத்த அனுமதியளிக்க உத்தரவிட வேண்டுமாய் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>எதிர்மனுதாரர்/ பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்உரையின் சுருக்கம்</u>**

மனுதாரரின் மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்யக்கூடியது என்றும் மனுதாரர் பிரமாண வாக்குமூலத்தில் 1வது பாராவில் கூறியுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றும், வாதி நல்ல உடல்நிலையில் தான் இருந்துள்ளார் என்றும் வாதி நேரடியாக நீதிமன்றத்திற்கு வந்தால் உண்மையை கூறிவிடுவார் என்பதற்காக அதனை தவிர்க்கும் பொருட்டு பவர் கொடுத்துள்ளார் என்றும் மனுதாரருக்கு தாவா சொத்தின் பூர்வீக தன்மை பற்றி தெரியாது என்றும் மனுதாரருக்கு மனுப்படி எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் எனவே மனுதாரர் தாக்கல் செய்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

4. இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,

"**மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?**
என்பதேயாகும் ".

6. **<u>தீர்வு</u>** :-

இரு தரப்பிலும் கேட்கப்பட்டு, ஆவணங்களைப் பரிசீலித்த வகையில் அசல் வழக்கானது மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரம் அதனை அனுசரித்து சொத்தின் சுவாதீனப்பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்து, அதை எதிர்த்து பிரதிவாதிகள் கட்சியாடி வந்து, அசல் வழக்கில் வழக்கானது வழக்கெழு வினா வனையப்பட்டு விசாரணைக்காக பட்டியலில் போடப்பட்டுள்ள நிலையில் வாதிக்கு உடல்நிலை சரியில்லாமல் சென்னையில் சிகிச்சை பெற்று வருவதால், அவர் சார்பாக வழக்கினை நடத்த கடந்த 12.01.2022 ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஒரு சிறப்பு அதிகார பத்திரம் ஒன்றை மனுதாரருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், எனவே வாதியின் சார்பாக வழக்கை நடத்த அனுமதியளிக்க உத்தரவிட வேண்டுமாய் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், ஆட்சேபனை தெரிவித்தாலும், மனுதாரர்/வாதியின் சிறப்பு அதிகார முகவர் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட கடந்த 12.01.2022 ல் பதிவு செய்யப்பட்ட சிறப்பு அதிகார பத்திரம் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி சிறப்பு அதிகார பத்திரத்தின் மூலம் மனுதாரரை அசல் வழக்கை நடத்த சிறப்பு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு ஏற்கத்தக்கது என நீதிமன்றம் கருதுகிறது.

8. முடிவாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2022 ம் ஆண்டு ஜூன் திங்கள் 03 ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN Digitally signed by M RAVICHANDRAN Date: 2022.06.03 14:53:05 +0200

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.

**<u>இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை

M RAVICHANDRAN Digitally signed by M RAVICHANDRAN Date: 2022.06.03 14:54:05 +0200

மாவட்ட உரிமையியல் நீதிபதி

பட்டுக்கோட்டை.

வரைவு உத்தரவு

இடைநிலை மனு எண். 1/2022

இன்

அசல் வழக்கு எண் 103/2021

நாள் 03.06.2022